# வலம்புரி
VALAMPURI

சங்கு3 | வள்ளுவர் ஆண்டு 2032 | மார்கழி 06 | வெள்ளிக்கிழமை | (21.12.2001) | தொலைபேசி 3378 | ஒலி 2


### புலிகளின் யுத்த நிறுத்தத்திற்குப் பதிலாக

# வன்னிக்கான பொருளாதாரத்தடையை நீக்கும் அறிவித்தல் இன்று வெளிவரும்?

## இந்தியா செல்லமுன்னர் பிரதமர் அறிவிப்பார்

(நமது நிருபர்)

**இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப்பரப்பின் பொருளாதார நிலை தொடர்பாக, அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் வவுனியா அரச அதிபர் கே.கணேசும் நேற்று சுமார் இருமணி நேரம் கலந்துரையாடியுள்ளனர்.**

**இக்கலந்துரையாடலை அடுத்து பிரதமர் ரணில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பார் என்றும் அதன் பின் வன்னிக்கான பொருளாதாரத்தடையை நீக்குவது பற்றிய விசேட அறிவிப்பொன்றை அவர் இன்று இந்தியா புறப்படுவதற்கு முன் அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

வன்னிக்கான பொருளாதாரத்தடையை நீக்குவது தொடர்பாகவும் அத்தியாவசிய உணவு, மருந்து பொருட்களை அனுப்பிவைப்பது தொடர்பாகவும் நேற்றுப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வவுனியா அரசஅதிபர் கே.கணேசுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் இச்சந்திப்பு நேற்று நண்பகல் 12மணியளவில் கொழும்பில் கேம்பிறிச்ரெறிசில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

பிரதமர் ரணிலுக்கும் வவுனியா அரச அதிபர் கே.கணேசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனாவும் கலந்து கொண்டார்.

அரசஅதிபர் கே.கணேஸ் கொழும்பு செல்லமுன் வன்னிப்பொருநிலப் பரப்புக்கு சென்று அங்குள்ள உணவு, மருந்து, போக்குவரத்து, எரிபொருள் ஆகியவற்றின் தேவைகளை அறிந்து கொள்வார்.

பிரதமருடனான சந்திப்பை அடுத்து புனர்வாழ்வு அமைச்சிலும் இது தொடர்பான கூட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது. இதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை பிரதமர் ரணில் விக்கிரகம சிங்கா நேற்றிரவு சந்திப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து பிரதமர் ரணில் இன்று புதுடில்லி புறப்படுவதற்கு முன் வன்னிக்கா பொருளாதார தடை நீக்கம் பற்றிய அறிவிப்பொன்றை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது (வ)

## யாழ் நகரப் பகுதியில் தூக்கிடப்பட்ட நிலையில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நாகரின் மத்திய பகுதியில் முனியப்பர் கோவில்வீதி வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில் உள்ள பற்றைக் காணியில் தூக்கப்பட்ட நிலையில் ஆணின் சடலமொன்று காணப்பட்டது.

நோற்றுக்காலை பொதுமக்களால் இச்சடலம் அவதானிக்கப்பட்டதையடுத்து, நகரப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு நிலவியது.

சுமார் 50வயது மதிக்கத்தக்க இச்சடலத்தில், மண்ணிற ரவுசரும் மஞ்சள் நிற சேட்டும் கையில் மணிக்கூடும் காணப்பட்டது.

சுமார் 50வயது மதிக்கத்தக்க இச்சடலத்தில், மண்ணிற ரவுசரும் மஞ்சள் நிற சேட்டும் கையில் மணிக்கூடும் காணப்பட்டது.

சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மற்றும், யாழ்மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்கும் சடலத்தை இனம் காணவுமென வைத்தியசாலை பிரேத அறையில் சடலத்தை வைக்குமாறு, நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

(இ!0)

## ரணில் இன்று இந்தியா பயணம்

## நாடு திரும்பியதும்யுத்த நிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்றபின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை முதன் முறையாக இன்று பிறபகல் புதுடில்லி பயனமாகிறார்.

புதுடில்லி செல்லும் பிரதமர் ரணில் அங்கு இரு தினங்கள் தங்கி இருப்பார் அங்க தங்கியிருக்கும் போது பிரதமர் வாஜபாய், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங், உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரை சந்தித்து பேசவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விசேட பத்திரிகையாளர் குழுவும் அமைச்சர் மெலிந்த மொறகொட, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டேவும் செல்கின்றனர்.

இந்தியா செல்லும் குழுவினர் அங்கு இந்தியத்தலைவர்களுடன இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக கலந்துரையாடிய பின்

(6ம் பக்கம் பார்க்க--)

## வலம்புரியின் ஈராண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது!

(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நேறறுப்பிற்பகல் 2மணிக்கு நல்லூா துர்க்கா மணிமண்டபத்தில் வலம்புரி நிாவாக இயக்குநர் சி வெற்றிவேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் பிரதமவிருந்தினராகவும் யாழ் பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் கல்வியியல் பேராசிரியர் சபா ஜெயராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். நிகழ்வு சிறக்கவும் பத்திரிகையை வாழ்த்தியும் நல்லை ஆதீன முதலவர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் இந்துமத குரு பீடாதிபதி சிவ ஸ்ரீ நயினை ஐ.மகேஸ்வரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபை ஆதீன அருட்திரு ஜெபநேசன் அடிகள மற்றும பாதுகாவலன் பத்திரிகை பிரதம ஆசிரியர் றூபன் மரியாம்பிள்ளை ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

தொடர்ச்சி 6ம் பக்கம்...

## உண்மை - நடுவுநிலைமை - பக்கம்சாராமை ஆகிய பண்புகளை வலம்புரி கொண்டுள்ளது

### 2 வது ஆண்டுவிழாவில் நீதிபதி சுப்பிரமணியம் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

ஒரு பத்திரிகைக்கு இருக்கவேண்டிய நடுநிலைமை, பக்கம் சாராமை, உண்மையை துணிவுடன் பிரசுரித்தல் ஆகிய மூன்று பண்புகளையும் 'வலம்வுரி" பத்திரிகை தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதியும் ஊர்காவற்துறை மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய பா.சுப்பரமணியம் நேற்றய தினம் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற வலம்புரிப்பத்திரிகையின் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உரையாற்றும்போது தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் நாளாந்தம் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் முழுக்க முழுக்க செய்தியாளர்களிலேயே தங்கியிருக்கின்றது அவ்வாறுதங்கியிருக்கும் போது செய்தியாளர்கள் தமது கடமையை சரிவர செய்யாத போது ஒரு பத்திரிகை நன்நிலையை அடைய முடியாது. (இ-5)

## பால்மா விலை குறையும்

(கொழும்பு)

ஜனவரி 1ம் திகதி முதல் பால்மாவின் விலையை 5ரூபா முதல் 7ரூபா வரை குறைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விலை குறைப்பு பற்றிய தகவலை அமைச்சர் ரவி கருணநாயக்கா வெளியிட்டுள்ளார்.

(இ-4)

## புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஈ.பி.டி.பி வரவேற்கின்றது!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை தாம்வரவேற்பதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கட்சியின் யாழ் அலுவலகம் அறிக்கையென்றை வெளியிட்டது.

(16ம் பக்...)

## ஒருவர் உயிரிழப்பு

முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் ஏற் பட்ட மோதலில் ஆவினி (கதிர மலை கோமதா)என்ற போராளி புலிகள் தூப்பில் உயிரிழந்துள்ளார்

## புலிகள்தம்மை தயார்ப்படுத்தவே யுத்தநிறுத்தம் செய்துள்ளனர்

### ஜே.வி.பி கருத்து.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் புலிகள் தம்மை பலப்படுத்திக் கொள்வதற்காக விடுக்கப்பட்ட அறிவித்தலாகவே கருதவேண்டி உள்ளது என்று ஜே.வி.வி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி 6ம் பக்க.....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## கேம்பிரிட்ஜ் வரலாற்றுநிறுவனம்

# பேராசிரியர் கலாநிதி ஜெயநேசனுக்கு பேரறிஞர் விருது வழங்கியுள்ளது

[யாழ்ப்பாணம்]

தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெப நேசன் அவர்களுக்கு கேம்பிறிட்ஜ் நகரில் அமைந்துள்ள அனைத்துலக வரலாற்றாய்வாளர் நிறுவனம் பேரறிஞர் விருது வழங்கியுள்ளது. இருபத்தோராம் நூற்றாண்டில் இரண்டாயிரம் தலைசிறந்த அறிஞர்கள் பட்டியலில் பேராயர் ஜெப நேசன் அவர்களையும் சேர்த்துள்ளது. சமயம். தத்துவம் ஆகியதுறைகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், எழுதிய கட்டுரைகள், நூல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அனைத்துலக வரலாற்றாய்வாளர் நிறுவனம் அவருடைய பெயரைத் தெரிந்துள்ளது.

பேராயர் ஜெபநேசன் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த சொற்பொழிவாளர் அவர்எழுதிய நூல்களில், அமெரிக்க பேராசிரியர் றிச்சேட் யங் அவர்களுடன் இணைந்து எழுதிய 'பத்தொன்பதாம் நூற்றாண்டு சமயச் சர்ச்சைகள்' என்பது பலரின் பாராட்டுதலைப் பெற்றது. பலமேனாட்டு கல்லூரிகளில் ஆழ்ந்து கற்கப்படுறது.

பேராயர் அவர்கள் சமயம், தத்துவம் என்பதில் மட்டுமன்றி தமிழ் இலக்கியத்திலும் தமிழர் உரிமைப்போராட்டத்திலும் அதிக ஈடுபாடுகொண்டவர் கடந்த பத்து வருடங்களாக யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [ந]

## 100 பேருக்கு 5 ஆயிரம் ரூபா

(தென்மராட்சி)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஊர்காவற்றுறையில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற 100 பேருக்கு மிருக வேளாண்மை திட்டத்துக்கு என தலா 5 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை அபிவிருத்திச்சங்கம் ஊடாக இக் கடன் நிதி வழங்கப்பட்டதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-77)

## ஜனவரி முதலாம் திகதி சகோதரத்துவ தினம்

### புதிய அரசு பிரகடனம்

[கொழும்பு]

எதிவரும் ஜனவரி மாதம் முதலாம்திகதியை சகோதரத்துவ தினமாக அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளதாக ஆளும் கட்சியனா ஐக்கிய தேசியக் கட்சி அறிவிக்கின்றது.

மலரப்போகும் புதியஆண்டில் அரசியல் பேதமோ, அல்லது இன, மதரீதியிலான பேதமோ இன்றி அனைவரும் சகோதர உணர்வுடன் ஒன்றுபட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளைநடந்துமுடிந்த பொதுத் தேர்தலின் பின் நாட்டுமக்களிற்கு முதன் முதலாக உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கமேற்படி கருத்தை வலியுறுத்தியதுடன் சகலரும் இந்நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (க-07

## விளையாட்டு செய்திகள்

### சர்வதேச கிரிக்கெட்

## அதி கூடிய ஓட்டங்கள் பெற்றோர் விபரம்

[லண்டன்]

2001ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் நடைபெற்ற கிரிக்கெட்அணிகளுக்கிடையான டெஸ்ட் போட்டிகளில் கூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

□ அவுஸ்ரேலிய அணி வீரர் மத்தியூ ஹெய்டன்13டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1250 ஓட்டங்களைப் அதிகூடிய ஓட்டமாகப் பெற்று முதலாமிடத்தில் உள்ளார்

□ மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் பிரைன்லாரா 9டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1151 ஓட்டங்களைப் பெற்று இரண்டாம் இடத்திலும்.

□ தென்னாபிரிக்க வீரர் ஹேல் கிப்ஸ் 12டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1089 ஓட்டங்களைப் பெற்று மூன்றாமிடத்திலும்;

□ இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தன 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1035 ஓட்டங்களைப் பெற்று நான்காம் இடத்திலும்,

□ தென்னாபிரிக்கவீரர் கலீஸ் 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 918 ஓட்டங்களைப் பெற்று ஐந்தாம் இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் லாரா 221 ஓட்டங்களைப் பெற்று முதலிடத்திலும், மத்தியூ ஹெய்டன் 203 ஓட்டங்களைப் பெற்று இரண்டாமிடத்திலும், கிப்ஸ் 196 ஓட்டங்களைப் பெற்று மூன்றாமிடத்திலும், கலீஸ் 189 ஓட்டங்களைப் பெற்று நான்காம் இடத்திலும், ஜெயவர்த்தனா 150 ஓட்டங்களைப் பெற்று ஐந்தாம் இடத்திலும் உள்ளனர். [க-02]

## இலங்கை கிரிக்கெட் அணி வெற்றிவாகை சூடியது

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வந்த மூன்றுநாடுகள் பங்குபற்றும் அபான்ஸ் வெற்றிக்கிண்ண முக்கோண ஒருநாள் போட்டித் தொடரை இலங்கை அணி வென்றுள்ளது.

நேற்றுமுந்தினம் பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை அணியும் மேற்கிந்திய தீவுகள் அணியும் விளையாடின இதில்இலங்கை அணி 34ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைஅணி 50ஓவர்களில் எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 253ஓட்டங்களைப்பெற்றது (இதில்சனத் ஜெயசூரியா64ஓட்டங்களையும், ஜெயவர்த்தனா63ஓட்டங்களையும்பெற்றனர் மேற்கிந்தியதீவுகள்அணி சார்பான பந்துவீச்சில் கூப்பர்2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் மழை காரணமாக ஆட்டம் இடையில் தடைப்பட்டது இதனால் மேற்கிந்தியதீவுகள் அணிவெற்றிபெற47ஓவர்களில்247ஓட்டங்கள் என்ற இலக்குநிர்ணயிக்கப்பட்டது ஆயினும்மேற்கிந்தியதீவுகள் அணி74ஓவர்களில் எழுவிக்கெட்டுக்களை இழந்து 212ஓட்டங்களைப் பெற்றது இதில்ஹைில60ஓட்


### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## மீள்கேள்வி அறிவித்தல்-2002 ஆம் ஆண்டு

31-10-2001 ஆந் திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடைகள் ஆகிய குத்தகைக்கு மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி (இறுதித்திகதி) - 2001.12 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 2001.12 28 ஆந் திகதி நண்பகல் 12.00 வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி - 2001.12.28 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு

அட்டவணை

| குத்தகையின் விபரம் | மாதவாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப் புப்பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி. எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1) மானிப்பாய் பொதுச்சந்தை [துவிச்சக்கரவண்டி தரிப்பிடம்உட்பட] | | 300.00 | 1500.00 | 500,000.00 |
| 2) மாட்டிறைச்சிக்கடை மானிப்பாய் | 400.00 | 300.00 | 1500.00 | 150,000.00 |
| **2. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1) சாவற்கட்டுச் சந்தை | | | | |

31-10-2001 ஆந் திகதிய வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடைகள் ஆகிய குத்தகைக்கு மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி (இறுதித்திகதி) - 2001.12 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 2001.12 28 ஆந் திகதி நண்பகல் 12.00 வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி - 2001.12.28 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு

அட்டவணை

| குத்தகையின் விபரம் | மாதவாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப்பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி. எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1) மானிப்பாய் பொதுச்சந்தை [துவிச்சக்கரவண்டி தரிப்பிடம்உட்பட] | | 300.00 | 1500.00 | 500,000.00 |
| 2) மாட்டிறைச்சிக்கடை மானிப்பாய் | 400.00 | 300.00 | 1500.00 | 150,000.00 |
| **2. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1) சாவற்கட்டுச் சந்தை [துவிச்சக்கரவண்டி தரிப்பிடம்உட்பட] | | 300.00 | 1500.00 | 40,000.00 |
| 2) நவாலி பிரசாத் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 300.00 | 1500.00 | 12,000.00 |
| **3. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1) பண்டத்தரிப்பு பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம்உட்பட) | | 300.00 | 1500.00 | 125,000.00 |
| 2) பண்டத்தரிப்பு சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 300.00 | 1500.00 | 30,000.00 |
| 3) பண்டத்தரிப்புச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 300.00 | 1500.00 | 10,000.00 |
| 4) பண்டத்தரிப்புச் சந்தை கருவாட்டுக்கடை இல 01 | 250.00 | 300.00 | 1500.00 | 7,000.00 |
| 5) பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல02 | 250.00 | 300.00 | 1500.00 | 7,000.00 |
| **4. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1) மாசியப்பிட்டி சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 300.00 | 1500.00 | 10,000.00 |
| 2) மாசியப்பிட்டி சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 300.00 | 1500.00 | 6,000 00 |
| 3) இளவாலை சந்தை, மாட்டிறைச்சிக்கடை | — | 300.00 | 1500.00 | 10,000.00 |
| 4) மாதகல் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 250 00 | 300.00 | 1500.00 | 4,000.00 |
| 5) மாதகல் சந்தை, மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 300.00 | 1500.00 | 10,000.00 |

**முக்கிய குறிப்பு:** அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள் சேவைகள் வரியான 12.5% ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், (ஜே. பி. யு. எம்.)
தலைவர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம்,
மானிப்பாய்.
2001-12-18.

(சி-3062)

ளை இழந்து 253ஓட்டங்களைப்பெற்றது (இதில்சனத் ஜெயசூரியா64ஓட்டங்களையும், ஜெயவர்த்தனா63ஓட்டங்களையும்பெற்றனர் மேற்கிந்தியதீவுகள்அணி சார்பான பந்துவீச்சில் கூப்பர்2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் மழை காரணமாக ஆட்டம் இடையில் தடைப்பட்டது இதனால் மேற்கிந்தியதீவுகள் அணிவெற்றி பெற47ஓவர்களில்247ஓட்டங்கள் என்ற இலக்குநிர்ணயிக்கப்பட்டது ஆயினும்மேற்கிந்தியதீவுகள் அணி74ஓவர்களில் எழுவிக்கெட்டுக்களை இழந்து 212ஓட்டங்களைப் பெற்றது இதில்ஹைஹில்60ஓட்டங்களும் கங்காக50ஓட்டங்ளையும பெற்றனர் இலங்கைஅணி சார்பான பந்துவீச்சில் தர்மசேன 3விக்கெட்டுக்களையும் ஜெயசூரியா 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இலங்கைஅணித் தலைவர் ஜெயசூரியா தெரிவுசெய்யப்பட்டார். (க-2)

## மீன்பிடி
### உபகரணங்கள்
## அன்பளிப்பு

(தென்மராட்சி)

பட்டினிக்கு எதிரான இயக்கம் வடமராட்சி கிழக்கிலுள்ள 96 மீனவர்களுக்கு மீன்பிடி தொழிலுக்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் பயனாளிகளாக இனம் காணப்பட்ட 350 மீனவர்களுள்முதல்கட்டமாக 96 பேருக்கு வழங்கப்பட்டதாகவும், ஏனையவர்களுக்கு காலக்கிரமத்தில் இது போன்ற உதவிகள் வழங்கப்படும்எனவும் தெரியவருகின்றது. (க-77)

## இன்று ஒரு தகவல்

# உயில் எழுதுவது எவ்வாறு?

ஒரு பெரியவர் வந்தார். சார்! தகவல் சொல்வது நீங்கள் தானா? என்றார். ஆமாம் என்றேன். எனக்கு ஒரு பெரிய பிரச்சினை. இப்போது அதற்கு நீங்கள்தான் ஏதாவது வழி சொல்ல வேண்டும் என்றார். சரி... இன்றைக்கு வசமாக மாட்டிக் கொண்டோம் என்று முடிவு செய்து கொண்டே "என்ன பிரச்சினை சொல்லுங்கள்" என்றேன் பிரச்சினை என்பதைப் பின்னர் சொல்லுகின்றேன். முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்றார். சரி கேளுங்கள் என்றேன்.

"சட்டத்தில் உயில், செட்டில்மென்ற் என்று இரண்டு வார்த்தைகள் அடிபடுகின்றனவே— அவைபற்றிய விபரம் தேவை. உயில் என்றால் என்ன? செட்டில்மென்ற் என்றால் என்ன?" என்று கேட்டார். சரி...சார் ஏதோ பெரிய இலட்சாதிபதி போல் இருக்கிறது. தன்னுடைய வாரிசுகளுக்கு சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கிற எண்ணத்தில் இருக்கிறார் என்பதை யூகித்துக் கொண்டேன்.

இருப்பினும் இதற்கு யோசனை கேட்க ஒரு நல்ல வக்கீலைத் தேடிப் போயிருக்கலாம்... அவருடைய நேரம் என்னிடம் வந்து சேர்ந்திருக்கிறார். இருக்கட்டும். பரவாயில்லை. நமக்குத் தெரிந்ததைச் செல்லுவோம் என்று நினைத்து ஆரம்பித்தேன்:

'ஒருவர் தன்னுடைய சொத்துக்களை மற்றவர்களுக்கு அதாவது வாரிசுகளுக்கு எழுதி வைக்க வேண்டுமென்று நினைத்தால் அதை இரண்டு விதமாகச் செய்யலாம்; ஒன்று உயில்: மற்றது செட்டில்மென்ற்.

செட்டில் மென்ற் ... என்பது என்னவென்றால் ஒருவர் உயிரோடு இருக்கிற போது தன்னுடைய சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்து விடுவது. அப்படிப் பிரித்துக் கொடுத்த பின்னர் அதில் உரிமை கொண்டாட முடியாது. அது எனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. செட்டில்மென்ற் செய்து விட்டால் அதன் பின்னர் அவருக்கு அதில் எந்தப் பாத்தியதையும் இருக்காது. சரி இதை எப்படி செய்வது? அது ஒன்றும் பெரிய காரியமில்லை இப்படி இப்படி செய்வதென்று முடிவு செய்துவிட்டால், அதை ஒரு முத்திரைப் பத்திரத்தில் எழுதிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வளவுதான் செட்டில்மென்ற் இப்படிச் செய்துவிட்டால் எங்கேயாவது ஒரு மூலையில் நிம்மதியாக உட்கார்ந்துவிடலாம். பின்பு சொத்துக்களை யாருக்கு எழுதி வைத்தீர்களோ அவராக மனது வைத்துச் சோறு போட்டால் அதையும் சாப்பிட்டுக் கொள்ளலாம். இல்லையென்றால் சும்மா இருக்கலாம்.

இனி உயில்என்றால் என்ன? ஒருவர் தான் இறந்த பின்னர் தன்னுடைய சொத்து யார் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்று எழுதி வைப்பதுதான் உயில். உயிரோடு இருக்கிறபோது பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்வது செட்டில்மென்ற்; இறந்தபின் பிரித்துக்கொடுக்க ஏற்பாடு செய்வது உயில். இதைப்பதிவு செய்ய வேண்டியதில்லை; பத்திரத்திலேயும்எழுதவேண்டியதில்லை. ஒரு சாதாரண வெள்ளைக் காகிதத்தில் எழுதினாற்கூடப் போதும் இரண்டுபேர் சாட்சிக் கையொப்பமிட்டால் சரி.

இந்த உயில் எழுதுகிற விடயத்தில் சட்டம் இவ்வளவு சலுகை காட்டுவதன் காரணம் ஒரு மனிதாபிமானமே யன்றி வேறொன்றுமில்லை. சாகப்போகிறவன் தன்னுடைய கடைசி ஆசையாக இந்தஉயிலை எழுதுகின்றான்; அந்த நேரத்தில் அவனிடம் போய் இதை முத்திரைப் பத்திரத்தில் எழுது. பதிவாளர் அலுவலகத்திற்கு எடுத்துக் கொண்டு போ என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது நன்றா? எமன்எப்போதுவந்து அழைத்துக்கொண்டு போவான் என்று நேரம்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதில் எழுந்து பதிவாளர் அலுவலகத்திற்குப் போய்விட்டு வருவோம் என்று கூப்பிட்டால் அது முடிகிற அலுவலா? இதை யோசித்துத்தான் சட்டம் இந்தச் சலுகையைக் காட்டுகிறது. உயில்-செட்டில்மென்ற் என்றமாதிரி வாரிசு அல்லது ஒருவருக்கு தானப் பத்திரமாகவும் ஒருவர் தன்னுடைய சொத்தை எழுதிக் கொடுத்துவிடலாம். இவைதான் விபரம்

இப்படி நான் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் எதிரிலிருந்த பெரியவர் கொஞ்சம்நிமிர்ந்து உட்கார்ந்தார். நான் அவரைப் பார்த்து "சார்! நீங்கள் கேட்ட விபரத்தைச் சொல்லிவிட்டேன். உங்கள் பிரச்சினை என்ன என்பதை நேரடியாகச் சொன்னீர்களானால் அதற்குப் பரிகாரம் தேடலாம். உயில் எழுதுவதில் ஏதாவது சிக்கலா? என்று கேட்டேன். "அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அதெல்லாம் எழுதி விட்டேன். பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை எப்படிப் பிரித்துக் கொள்வது என்று ஏற்கனவே என் பிள்ளைகளுக்கு எழுதி வைத்துவிட்டேன்'' என்றார் அவர். அப்படியென்றால் உங்களுக்கு ஏன் கவலையென்றேன். "அந்தப் பத்து இலட்சம் ரூபாமதிப்புள்ளசொத்தை எப்படிச்சம்பாதிக்கிறதென்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன். அதற்குத் தான் உங்களிடம் ஆலோசனை கேட்க வந்தேன்'' என்றார். □

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முடியாது

## எதிர்க்கட்சித்தலைவர் ஆவேசம்

(கொழும்பு)

புதிதாகப் பதவிஏற்றஐக்கிய தேசியமுன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கமுடியாதநிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளது.

எதிர் கட்சித் தலைவர் ரட்சிறி விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சில முக்கியமான விடயங்களில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருந்தோம்;

ஆனால் எமது கட்சி உறுப்பினர்கள் ஐக்கியதேசிய கட்சியினரால் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருகிறார்கள்;

இந்நிலையில் அரசுக்கு ஆதரவு வழங்குவது பற்றி மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிலையிலேயே நாம் உள்ளோம், (க-வ)

# விடுதலைப்புலிகளுடனான பேச்சே

# மனித உரிமை மீறலைத் தடுக்கும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளில்முக்கியமானதாகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது :

பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்காவிற்கு எழுதிய கடிதத்தில்இவ்வாறு தெரிவித்துள்ள மேற்படி சபை மனித உரிமைகள் மீறப்படுவதை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து விபரத்தை தமக்கு தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளது:

முன்னைய அரசாங்கம்மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை எதிர்ப்பதில் தாமதம் ஏற்பட்டதாக மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியதோடு பாதுகாப்புப் படையினருக்கு இவ்விடயம் சம்மந்தமான பொறுப்புக்களின் விபரங்களையும்அறியத்தருமாறு கேட்டுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுதல் ஆயுதப்படைகளை அகற்றுதல் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் யுத்தம் நடக்கும் இடங்களில் வாழும் மக்களுக்கு உணவு, மருந்து, முதலிய வசதிகளை வழங்குவது தொடர்பாக ஐ தே கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட மனித உரிமைகள் சம்மந்தமான உறுதி மொழிகள் நடைமுறைப்படுத்தப் படும் என்று நாம் நம்புவதாக மேலும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது (எ)

## மோ. சைக்கிள் பாகங்கள் திருட்டு

(சுழிபுரம்)

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பொ. தனபாலசிங்கம் என்பவருடைய மோட்டார் சைக்கிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடிச் சென்ற திருடர், அதன் பூட்டை உடைக்க முடியாது, பெறுமதி வாய்ந்த அதன் பாகங்களைக் கழற்றி எடுத்துக்கொண்டு எஞ்சியபாகங்களை வயலுக்குள் விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது; (எ-ப-10)

## வறிய குடும்பங்களுக்கு மலசலகூடங்கள்

(தென்மராட்சி)

யுனிசெவ் நிறுவனம் சங்கானை, யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுகளில் 159 மலசலகூடங்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு அமைத்து வருகின்றது.

இவற்றுள் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 120 மலசலகூடங்களும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொழும்புத்துறையில் 39-ம் அமைந்துள்ளது. (எ-77)

## முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

(மந்திகை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முன்பள்ளிஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர் வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு புலோலியில்இயங்கும்பச்சிலைப்பள்ளிஉப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது;

சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச முன்பள்ளிஆசிரியர் சங்கத் தலைவி ஆ. சிவரஞ்சினி அறிவித்துள்ளார். (உ-23)

## யாழ். பல்கலையில் ஆங்கில திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் ('அப்பாஸ் ஹியரோஸ்ரமி') ABBAS KIAROSTAMI இயக்கிய ஆங்கில உபதலைப்புகளுடனான ஈரானிய திரைப்படமான) குளோஸ்அப் CLOSE UP எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர், பேராசிரியர், இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (க)

## பனை அபிவிருத்திச்சபை தலைவர் பதவிக்கு பலரும் போட்டி

(தென்மராட்சி)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து, பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பதவிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பிரமுகர்கள் திரைமறைவில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

இதன்பொருட்டு கடந்த தேர்தலில் போட்டியிட்ட சில வேட்பாளர்கள் கொழும்புக்குப் படையெடுத்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர்கள் இருவரும் கூட தலைவர்பதவியைப் பெற்றுக்கொள்வதில் நாட்டம் கொண்டுள்ளனர் என அறியவருகின்றது.

இந்தஇருவரில்ஒருவர் வெளிநாடொன்றில் தற்போது இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும், (க-77)

## வசதிகளற்ற நிலையில் முகாம்அகதிகள் பரிதவிப்பு

(தென்மராட்சி)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்ட ஊறணி நலன்புரி முகாமில் வதிகின்ற குடும்பங்களுக்கு கிணறு மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாமல் இருப்பது குறித்துத் தெரிய வந்துள்ளது.

தமக்கு மேற்படி வசதிகளை உடன் செய்து தரும்படி இம்முகாமில் தங்கியிருக்கும்குடும்பங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளிடம் கோரிக்கைகள் விட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (க-77)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பரீட்சைக்கடமைகளில் ஈடுபடுத்த கோரிக்கை

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளில் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களும் சாதாரண நோக்குநர்களாகக் கடமையாற்றுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது.

மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படும் அதிபர்கள் தங்கள் பாடசாலை ஆசிரியர்களையே பரிமாற்றம் செய்து கொள்வதாகவுமஇவ் விடயத்தில் சிறிய பாடசாலை ஆசிரியர்களைப் புறக்கணிப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ-79)

## 10 வருடங்களின் பின் தீவக வலயத்தில் இரு பாடசாலைகள் இயங்கும்

(ஊர்காவற்றுறை)

தீவககல்வி வலயத்தில் கடந்த பத்து வருடங்களாக இயங்காதிருந்த இரு பாடசாலைகள் எதிர்வரும் ஆண்டு முதல் இயங்கவுள்ளன,

வேலணைசெட்டிப் புலம்அ.த.க.பாடசாலை, புளியங்கூடல் சின்னமடுறோ.க.பாடசாலை ஆகிய இரண்டுமே எதிர்வரும் ஜனவரி மாதம்

[4ம் பக்கம் பார்க்க]

## சிந்தனைக்கு விருந்து

### தெள்ளு மருட் காளாகுவோம்

மார்கழி மாதந்தில் மன்னுதிரு வாதிரையான்
சீர்பரவ ஆலயத்தை வைகறையில் - சேருவோம்
பள்ளி எழுச்சியும் பாவையும் பாடியே
தெள்ளுமருட் காளாகு வோம்.

-பழையவன்

# அராலித்துறை வெளியில் போர் ஒத்திகை

# அச்சத்தின் மத்தியில் தீவுப் பகுதி மக்கள்

அராலித்துறைவெளியில், இலங்கைக் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் கூட்டுப் போர் ஒத்திகையில் கடந்த 3 தினங்களாக ஈடுபட்டு வருகின்றனர்

இதனால் அராலித்துறை வெளிப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணம் உள்ளன.

இச்சத்தங்கள் காரணமாக தீவுப்பகுதி மக்கள் ஒருவித அச்ச உணர்வுடன் வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது இதேவேளை, தீவுப் பகுதியில் பெருந்தொகையில் கடற்படையினர் குவிக்கப்பட்டிருப்பதனையும் அவர்கள் அடிக்கடி ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

இது இவ்வாறிருக்க குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலும் படையினர் உசார்ப் படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## யுத்தத்தை இந்தியா ஒருபோதும்விரும்பவில்லை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுவிடயத்தில் யுத்தத்தின் மூலமான தீர்வை இந்தியா ஒருபோதும் விரும்பியதில்லை என்று இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தி புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம்சித்தார்த்தனிடம் தெரிவித்துள்ளார்

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அடுத்து இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் மேலும் தெரிவிக்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக புதியஅரசு மேற்கொள்ளவிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

## மண்ணெண்ணை பெற சங்கங்கள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையிலுள்ள எரிபொருள் களஞ்சியத்தில் இருந்து மண்ணெண்ணையைப் பெற்று பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கென கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பிவைக்காத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று முன்தினம் தமது கொள்வனவுக் கட்டளைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சில பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத்தேவையான மண்ணெண்ணையைப் பெறுவதற்கு கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பி வைக்கவில்லை என்ற பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் குற்றச்சாட்டை வலம்புரி வெளியிட்டதை அடுத்து கொள்வனவுக் கட்டளைகளை வழங்காத பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ம)

## பரீட்சைமுடிவுகள் வந்துசேரவில்லை

(மந்திகை)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் இதுவரை கிடைக்காமையால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

பாடசாலை ஊடாகப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முடிவுகள் வெளியாகி இரண்டு வாரங்களுக்குமேலாகியும் தமது முடிவுகள் இதுவரை கிடைக்காமை குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் மனக்கவலை வெளியிட்டுள்ளனர். (உ-23)

## மாவையின் பணிமனை

(தென்மராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா பொது மக்களைச் சந்திப்பதற்கு வசதியாக யாழ். மாட்டின் வீதியிலுள்ள தனியார் இல்லத்தில் தனது பணிமனையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது கூட்டணிக் காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இவரது தொலைபேசி இணைப்பு புதிய பணிமனைக்கு மாற்றப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (எ-77)

## திருவெம்பாவை ஊரடங்கு தளர்த்துக

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகவுள்ள திருவெம்பாவை உற்சவத்திற்காக யாழ் மாவட்டத்தில் இப்போது நடைமுறையிலுள்ள ஊரடங்கு நேரத்தை அதிகாலையில் ஒரு மணித்தியாலம் குறைக்குமாறு சைவஆலய நிர்வாகங்களும் சமயநிறுவனங்களும் வடபகுதி இராணுவதலைமை அதிகாரியிடம் கேட்டுள்ளன. (எ)

## பன்றிகள் அட்டகாசம்

தென்மராட்சியிலுள்ளமட்டுவில், சரசாலை மற்றும் நுணாவில் பகுதிகளில் பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அங்கு சென்று வரும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பன்றிகள் வளவுகளில் நாட்டப்பட்டுள்ள பயிர் வகைகளைச் சேதப்படுத்தி வருவதாகவும் அறியப்படுகின்றது. (க-77)

## புத்தாண்டு தொடக்கம் விமான சேவை அதிகரிப்பு

(கொழும்பு)

பாலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையே விமான சேவைகள் புத்தாண்டு தொடக்கம் அதிகரிக்கப்படும் என விமானப் படைத்தளபதி ஏயர்மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் பொருட்டு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும். இந்துகலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரன் விமானப்படை தளபதியுடன் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை கடந்த 18ஆம் திகதி நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்தமூன்று ஆண்டுகளுக்கு முன நிகழ்ந்த தனியார் விமானச் சேவையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார் (எ)

## இராசி பலன்

21- 12- 2001

(மார்கழி 6, வெள்ளி)
சஷ்டி மு.ப 9.55வரை
சதயம் பி.ப 3.16வரை
ராகுகாலம் 10.54- 12.24
சுபநேரம் 6.24- 7.54
திருவெம்பாவை பூசை ஆரம்பம்

**மேடம்**
தனலாபம், நண்பர்கள் சந்திப்பு. காரியம் கைகூடும், கௌரவம்.

**இடபம்**
கடின உழைப்பு. தொழில் வெற்றி, அதிகாரம், நல்ல காரியம்.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், திடீர் பயணம். காரிய தாமதம், உடல் நலக் குறைவு.

**கடகம்**
வீண்தொல்லை, போசன சுகம் முயற்சி தடங்கல், உறவினர் பகை.

**சிங்கம்**
அபூர்வ சந்திப்பு. சுவாரஸ்யம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
இலட்சுமீகரம், சொத்து சேரல், ஆரோக்கியம், முயற்சி கைகூடும்.

**துலாம்**
குடும்பக் கவலை, காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம், தொழில் முன்னேற்றம்.

**விருச்சிகம்**
வீண் கற்பனை, பயந்த சுபாவம், ரோகபயம், முயற்சி தாமதம்.

**தனுசு**
இனிய சம்பவம், காரிய அனுகூலம், சகோதரர்உதவி, ஜனவசியம்.

**மகரம்**
தேவையற்ற விவாதம், மதிப்புக்குறைவு, தனவிரயம், முயற்சி கைகூடும்.

**கும்பம்**
ஜனவசியம், புதிய முயற்சி, காரியம்கைகூடும், உடல்நலம்

**மீனம்**
காரிய அலைச்சல், நித்திரைக்குறைவு, நிலைமாற்றம் மனக்குழப்பம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்


வலி கிழக்கு, கோப்பாய்
பிரதேச செயலர் பிரிவு

**முத்தமிழ் விழா- 2001**

காலம்: 22-12 2001 (சனி)
23-12-2001(ஞாயிறு)
இடம்: கோப்பாய் பிரதேச செயலக திறந்த வெளியரங்கு
நேரம்: பி.ப 1.30
நிகழ்வுகள்: நாட்டியம், நாடகம், இசைக்கச்சேரிகள் கவியரங்கு, பட்டிமன்றம், சிறப்புசொற்பொழிவுகள் இன்னும் பல நிகழ்ச்சிகள்
பிரவேசம் இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வலி கிழக்கு பிரதேச செயலக தலைவர்
கலாசார பேரவையினர்.
(சி-3061)


## போட்டிக்கான முடிவு திகதி பிற்போடப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்களுக்கிடையே நல்லூர் றோட்றிக்கழகத்தினால்நடாத்தப்பட்டு வரும் சுவரொட்டிப் போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பும் திகதி அடுத்த ஆண்டு ஜனவரி 10ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக றோட்றிக்கழகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் தமது ஆக்கங்களைபாடசாலை ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [ந-5,19]

## மூன்றாம் கட்ட மண்ணெண்ணெய் விநியோகம்

(மந்திகை)

நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மூன்றாம்கட்ட மண்ணெண்ணெய் கட்டை வேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வருவதாக சங்கத்தின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (உ-23)

## பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று ஆரம்பமான க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்கு 51 இலட்சத்து 51 ஆயிரம் மாணவர் தோற்றுவதாக பரீட்சை ஆணையாளர் ஏ எம். ஆர்ஷி அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

4072 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறுவதாக அவர் மேலும் தொவித்துள்ளார். (க)

## நாவல் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் தேவிபரமலிங்கத்தின் 'அணி திரளும் சிறு அலைகள்' நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தலைவர் அ. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா கலந்துகொள்ளவுள்ளார்.

நூல் ஆய்வுரையை ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) யாழ் பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கலாநிதி நா. சண்முகலிங்கன், திருமதி கோகிலா மகேந்திரன், க. தணிகாசலம், அ. யேசுராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ-19)


யா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
**150வது ஆண்டு நிறைவு**
**(1852-2002)**

பாடசாலைகழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்.

★ மென்பந்து கிரிக்கட்
★ உதைப் பந்தாட்டம்
★ வலைப்பந்தாட்டம்
★ கரப்பந்தாட்டம்
★ தாச்சிப் போட்டி (13 வயது)
★ சைக்கிளோட்டம் (ஆண், பெண்)
★ மரதன் ஓட்டம் (ஆண், பெண்)
★ ஹொக்கி போட்டி (ஆண்-கழகம்)
★ கூடைப்பந்தாட்டம் (ஆண்-கழகம்)

விண்ணப்ப முடிவு திகதி: 15-01-2002
மேலதிக விபரங்களுக்கு கல்லூரி அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்
S. K. தங்கவடிவேல்
செயலாளர்,
விழா சபை.
(4094)


## தீவக

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் இயங்குவதற்கான நடவடிக்கையினை தீவகக் கல்வி வலயம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி பாடசாலைகளுக்கான அதிபர் மற்றும்ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக நடவடிக்கைஎடுக்கப்படுவதாக கல்விவலயவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-75)

நாடாது நட்டலிற்கேடில்லை நட்பின் வீடில்லை நட்பாள் வர்க்கு

**குறள்**

---

# வலம்புரி

---

## நல்லதொரு சந்தர்ப்பம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிப் பீடமேறிய கையோடு, விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

இம் மாதம் 24ந் திகதி நள்ளிரவு 12மணி முதல் 2002ம் ஆண்டு ஜனவரி 24ந் திகதி நள்ளிரவுவரையான ஒருமாதகாலம்யுத்த நிறுத்தம் செய்வதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தலின் முடிவுகள் சமர்தானத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும், புதிதாக ஆட்சிப் பீடமேறிய ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை வலியுறுத்தியே தேர்தலில் வெற்றியீட்டியதால் புதிய அரசுக்கு ஓர்சந்தர்ப்பத்தை- சமாதான நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்துவதாகவும புலிகளின் யுத்த நிறுத்தம் அமைந்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24ந்திகதி முதல் தொடர்ந்து நான்குமாதங்களுக்குநல்லெண்ண நோக்குடன் ஒருதலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்திருந்தனர்.

ஆனால்அதனை ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி உதாசீனம் செய்ததுடன் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டனர் எனப் பிரசாரமும் செய்தது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்த ஜனாதிபதி சந்திரிகாதலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டி ஆட்சிப் பீடமேறிய ஒருவருடத்திற்குள்ளேயே ஆட்சியால் இறக்கி விட்ட சம்பவம் நடந்து முடிந்து விட்டது.

இப்போது சிறிலங்கா அரசுக்கு விடுதலைப் புலிகள் மீண்டுமோர் சந்தர்ப்பத்தை உலகநீதியின்பெயரால் வழங்கியுள்ளனர்.

புலிகளின் இந்த ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி நல்ல முறையில் பயன்படுத்துமாயின் அழகிய இலங்கைத் தீவில் எல்லா இனமக்களும் ஒற்றுமையாக ஒன்றுகூடிவாழ முடியும்.

இல்லையேல்பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்ட அதேகதி அடுத்த ஆண்டு டிசம்பர் 24ந் திகதிக்குள் ஐ.தே. கட்சிக்கும் ஏற்படுவது தடுக்க- தவிர்க்க முடியாததாகி விடும்.


---

**வெள்ளி நற்சிந்தனை**

# ஆவலுடன் அண்ணாமலையான் புகழ்பாடிப்

# பாவையர்கள் பலர்நோற்ற திருவெம்பாவை

**நா. கோபாலகிருஷ்ணன்**
நயினை



பாரத நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களுள் திருவெண்ணாமலையும் ஒன்றாகும், ஐம்பூதத் தலங்களுள் அக்கினித்தலம் இதுவென ஆன்றோர்கூறுவர். மலையேஇறைவனின் சோதிப் பிழம்பாகத் தோன்றிப் புகழ் பெற்றது. அருணாசலகிரி எனவும் இம்மலை அழைக்கப் பெறுகின்றது. அருணாசலம் என்பதற்குச் சிவந்தமலை என்பது பொருள் பிரமன், அரி என்றவர்கள் பாதைப் பொடுங்க அரனார் அழல் உருவாய் அதாவது சோதி வடிவாய் அங்கே அளவிறந்து நின்ற ஐதீகத்தை உணர்த்துகிறது இப்பெயர்.

### பாவைபாடியமை

நினைத்தாலே முத்தி தரும் தலம் அண்ணாமலை அருணகிரிநாதர் வாழ்ந்து முத்தி பெற்ற திருத்தலம் இதுவாகும். மாணிக்கவாசக சுவாமிகள் இத் திருத்தலத்தில்பர்ணசாலை அமைத்து வாழ்ந்த காலத்தில் திருவண்ணாமலைப்பருவ மகளிர் மார்கழி நீராடுவதற்கு அதிகாலையில் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிச் சென்றதை அடிப்படையாகவைத்தும் பாடப்பெற்றவையே திருவெம்பாவைப்பாசுரங்கள்சிவபெருமானே மணிவாசகரை நோக்கி பாவை பாடிய பனுவல் வாயால் கோவை பாடுக என்று பணித்தார் என்றால், திருவெம்பாவைப் பாசுரங்களின் பொருளின் அர்த்தத்தின் வெளிப்பாடு தெளிவாகின்றது

''உண்ணாமுலையுமையாளொடுமுடனாகிய வொருவன்'' என்று தொடங்கி ''அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ண மறுமே'' என்று முடிக்கின்றார் திருஞானசம்பந்தர், அத்தகைய சிறப்பு மிக்க திருவண்ணாமலையானின் சிறப்பை - அருணை திருவண்ணாமலைப் பருவமகளிர் மூலம் வெளிப்படுத்துகின்றார் மாணிக்கவாசகர் திருவாசகத்துள் மிகச் சிறந்தது திருவெம்பாவை மார்கழி மாதத்தில் திருமுறைகளைத் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு ஆலயங்களில் திருவெம்பாவை மாத்திரம் ஓதவேண்டும் என்ற விதிமுறையுமுண்டு.

### திருப்பாதம் போற்றிப் பாடுதல்

அண்ணாமலையானையும் உண்ணாமுலையுமையாளையும் மையப் பொருளாக வைத்தே மணிவாசகர் திருவெம்பாவைப் பாசுரங்களைத் தந்துள்ளார். பிரமா விஷ்ணுவால் அடி முடி காண முடியாத அண்ணாமலையானை ஆதியும்அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம் கண் மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்முதலும் முடிவு மற்ற அரியபெரியசோதியான இறைவனை நாங்கள்புகழ்ந்து பாடப் பெண்ணே அதைக் கேட்டும் கேளாதவள் போல் துயில்கின்றாய் உன்செவி வன்செவியா? எமது பாட்டின் ஒலியைக் கேட்ட மற்றொரு தோழி பக்தி மேலீட்டால் விம்மி விம்மிப் படுக்கையில் துவண்டு விட்டாள் மார்கழி நீராட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவள் ஆகிவிட்டாள்; அவளின் அருள் வெளிப்பாடு இத்தகையது பாசம் பரஞ்சோதிக்கு என்று இராப் பகலாய் பேசுவாய் ஆனால் இப்பொழுது படுக்கைக்கே பாசத்தை தந்துவிட்டு தூங்குகின்றாய் நாங்கள் தேவர்கள் போற்றும் தில்லைக்கூத்தன் திருப்பாதங்களைப் போற்றிப் பாடுகின்றோம் எழுந்துவா தோழிஎன்றழைக்கின்றனர் தோழியர் முத்துப் போன்ற புன்சிரிப்புடன் ஆண்டவன், என் ஈசன் என்று பேசுவாய் சித்தம் அழகியர்களாய் உள்ளத் தூய்மையுடன் அவன் புகழ்பாடி வந்துள்ளோம் கதவைத்திற என்கின்றனர்உன்போன்றஉள்ளம் தூய்மையுடைய அழகியர்தான் நம் சிவனைப் பாட வேண்டும். சித்தம் அழகியர்களாய்ப் பாடவேண்டும் அதாவது உள்ளத் தூய்மையுடன் இறைசிந்தனையுடன் ஆண்டவன் புகழ்பாடிபஜனை செய்ய வேண்டும் என்பது உட்பொருள் சிறந்த அடியார் சிந்தனையில் இறைவன் திருநாமம் ஒன்றிய அடியார் சிந்தனையில் இறைவன் திருநாமம் ஒன்றிய அடியார் திருக் கூட்டம் எமக்கு வேண்டும் என்று வேண்கோள் விடுக்கின்றனர் இதுவே நமக்கும் இன்று வேண்டியுள்ளது. மால் அறியா நான் முகனும் காணா மலையினை நாம் போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும் என்ற வரிகள் திருவண்ணாமலையானின் தோற்றத்தின் உட்பொருளையும் திருமாலும் நான்முகனும் காணமுடியாத சோதிப்பிழம்பின் அடிமுடியை அவன்புகழை ஒன்றிப் பாடுவதன் மூலம் காணமுடியும் என்ற உள்ளத்திடத்தை உள்ள ஆர்வத்தைத் தருகின்றது இதுதான் நாங்கள் உனக்குத் தருகின்ற பரிசு என்கின்றனர்.

### கன்னிப்பெண்கள்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே என்றபாடல் மார்கழிநிராட உதயத்தின் முன் எழுந்து தோழியரை துயில்எழுபபும் பெண்கள் மணமாகாத கன்னிப் பெண்கள் என்பது புலனாகின்றது உன்னடியார் தாழ்பணிவோம்ஆங்கு அவர்க்கே பாங்காவோம. அன்னவரே எங்கணவர்ஆவார்ஆவர் உகந்து சொன்ன பரிசே லோரெம்பாவாய் பணிசெய்வோம் சின்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்என்னகுறையும் இதலாம்ஏலோர் எம்பாவாய் என்றவரிகளின் கூற்றுப்படி சிவஅடியவர்களே தம்கணவராக வர வேண்டும் என்று முன்னைக்கும் பின்னைக்கும் முழுமுதற் பொருளாக விளங்குகின்ற சிவனை வேண்டுகின்றனர் தோழியர் உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று தொடங்கும் பாடலும் சிவன் அடியவர்களிற்கே பெற்றோர் தம்மை திருமணம் செய்ய திருவருள் பாலிக்க அருள் புரியவேண்டும் மற்றவர்களிற்கு வாழ்க்கைப் படக் கூடாது பெற்றோர் அந்த முடிவை எடுக்காதுஎங் கொங்கை நின் அன்பா அல்லார் தோள சேரற்க எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க என்பதன் மூலம் சிவ அடியவர்களிற்கு செய்கின்றபணி இறைவனுக்குச் செய்கின்ற பணிக்கு ஒப்பானது என்பதையும் இந்த வாழ்வு கிடைத்துவிட்டால் சந்திர சூரியர் எத்திசையில் உதித்தாலும் கூட எமக்கு அக்கறையில்லை என்றும் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பெங்கு மடுவில் நீராடி தன்னிப்பிரிவிலா எமகோமான் அன்பற்கு முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளை நல்கும் இறைவியை வேண்டிப் பாடுகின்றனர்.

அஞ்ஞானத் துயிலில் மூழ்கிக்கிடக்கும் நம்மை விழிப்படைய வைத்து மெஞ்ஞான உணர்வை ஊட்டி தெய்வீகத் திருவருளில் ஒன்ற வைப்பதே திருவெம்பாவையின் உட்பொருளாகும். போற்றிமால் நான்முகனும் காணாத பொன்னடிகள் நம்மை உய்விக்க மார்கழி நீராடல் வழி வகுக்கின்றது. ■

---

## வாழ்த்துச் செய்தி

தினமும் காலை விடியும்போது யாழ். மக்களின் மனதில் தனது முகம் பதிக்கும் பத்திரிகையாக வலம்புரி வளர்ந்து வந்து இன்று 3ஆம் ஆண்டில் தனது பாதம் பதித்து பெருமையுடன் நிமிர்நது நிற்கும் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். வலம்புரியின் வளர்ச்சிக்கு தமமை அர்ப்பணித்து செயலாற்றும் நிர்வாக இயக்குநர், நிர்வாக உத்தியோகத்தர், ஆசிரியர், ஆலோசகர் முதல்பணியாளர்கள் வரைக்கும் இடைவிடாத முயற்சியுடன் செயற்படும் அனைவரையும் மனமார வாழ்த்துகிறேன்.

ந. யோகராஜன்
பிரதி பிராந்தியப் பணிப்பாளர்
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
வலயம 4, பிராந்திய உப- பணிமனை,
யாழ்ப்பாணம்.

---

## தினசரி தியானம்

## மனம்

சிந்தை பிறந்ததும் ஆங்கே - அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே - கண்ட
யான் தான் இரண்டற்று இருந்ததும் ஆங்கே;

**- தாயுமானவர்**

தீயில் போட்ட அடுப்புக்கரி தானே தீயாவது போன்று தேவே, என்மனதை உன்னிடம் கொடுத்து விட்டால் அது உன் சொரூபம் ஆய்விடுகிறது.

மனம் இருக்கும் வரையில்உலகக்காட்சியிருக்கிறது. நல்லமனதுக்கு உலகம் நல்லதாகக் காட்சியளிக்கிறது. கெட்ட மனதுக்கு உலகம் கெட்டதாகத்தென்படுகிறது. தெய்வீக மனதுக்குத் தெய்வக் காட்சி தென்படுகிறது; மனம் அழியுங்கால் காணப்படும் உலகும் மறைகிறது. மனோ நாசதிதுக்குப் பிறகு எஞ்சியிருப்பது மெய்ப் பொருள்;

**-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

---

## உதிரிப்பாகம் இல்லை திருத்தாமல் 27 பஸ்கள்

[தென்மராட்சி]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையிலுள்ள 27 பஸ் வண்டிகள் உதிரிப்பாகங்கள் இன்மையால் திருத்த முடியாதிருப்பதாகத்தெரியவருகிறது


இவற்றுக்கு வேண்டிய உதிரிப்பாகங்களை அனுப்பிவைக்கும்படி பல கோரிக்கைகளை போக்குவரத்துச் சபையின் தலைமைப் பீடத்திற்குத்தெரிவித்திருந்த போதும கூட அவை இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று அறியவருகிறது.

இது இவ்வாறிருக்க மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள பகுதிக்குப் போதிய பஸ் சேவைகள் திருப்திகரமாக நடத்தப் படவில்லை என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அதன் நவம்பர்மபதநிலைவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது, [எ-77]

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சுப்பிரமணியம் உதயசேகர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (633162948V) கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம்காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும் (எ)




வலம்புரியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றபோது, எடுக்கப்பட்ட படங்கள். படத்தில் வலம்புரியின் நிர்வாக இயக்குனர் சி.வெற்றிவேலாயுதம், நல்லை ஆதீன முதல்வர், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீதியரசர் பா.சுப்பிரமணியம், மனிதநேய அமைப்புக்களின் செயலாளர் சிவசுப்பிரமணியம், பாதுகாவலன் பிரதம ஆசிரியர் வண.பிதா ஞூபன் மரியாம்பிள்ளை, யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, கல்வியியல் பேராசிரியர் சபாஜெயராசா, தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி ஜெபநேசன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். விழாவில் கலந்துகொண்ட அரச, பொது, வர்த்தக அமைப்புகளின் பிரமுகர்களின் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை அரசு அசட்டை செய்யக் கூடாது

## காணாமல் போன படையினரின் சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

இனவாதக் கட்சிகள் மற்றும் இனவாத அமைப்புக்களின் கருத்துக்கும், அழுத்தத்துக்கும் அடிபணியாது இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ள அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கும் என நம்புவதாக கடமையின் போது காணாமற்போன படையினரின் உறவினர் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் தொடர்பான செய்தியை வரவேற்று மேற்படிசங்கம் அறிக்கையொன்றினை நேற்று வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் சமாதான நலலெண்ணத்துக்கான ஓர் சமிக்ஞையாக விளங்குகின்றது இச்சந்தர்ப்பத்தை அரசு அசட்டை செய்யாது. சாதகமாக பயன்படுத்துமாயின் நாட்டிலுள்ள மனித உயிர்கள் காப்பற்றப்படுவதுடன் அது நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் வழிவகுக்கும்.

கடந்த வருடம் புலிகள் அறிவித்த யுத்தநிறுத்தத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நிராகரித்ததைப் போல் ஐக்கிய தேசிய கட்சி அரசும் இதனைத் தட்டிக்கழிக்கக் கூடாது.

இதனை நல்லமுறையில் பயன்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் மேற்படிசங்கம் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது.

(ந-4)

# யுத்தத்தை நிறுத்தக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பொது அமைப்புக்கள் ஏற்பாடு

(கொழும்பு)

யுத்தத்தை உடனடியாக நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் போச்சுவாத்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி 80க்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உள்ளன.

இச்சமாதானப் போரணியில் தேசிய சமாதான பேரவை உட்பட பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொள்ள உள்ளன.

இந்த ஆர்ப்பாட்டப் போரணியில் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

(வ)

O/L
2001
பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கு எமது
வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்
D.M.I
யாழ்.நகர்

# தேர்தல் அமைதியாக இடம்பெறாததற்கு தேர்தல் ஆணையாளரே காரணம்!

## சப்ரல் அமைப்பு குற்றச்சாட்டு!

(கொழும்பு)

பொதுத்தேர்தல் அமைதியாகவும் நீதியான முறையிலும் நடைபெறுவதற்கு தேர்தல் ஆணையாளர் மேற் கொண்ட நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்பட்டதாக சப்ரல் அமைப்பின் பேச்சாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தொரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் தொடர்பான சப்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

1988-89 காலப்பகுதிகளுக்குப் பின்னர் தற்போது நடைபெற்று முடிந்த தேர்தலிலேயே அதிக வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. வேட்புமனுத்தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வரையான காலப்பகுதியில் 25பேரும் தேர்தல் தினத்தன்று 24பேரும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுவதற்கு பொலிஸார் மேற்கொண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் பெரும் குறைபாடுகள் காணப்பட்டமையும் ஒரு காரணமென அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(இ-5)

# வலம்புரியின்...

1ம் பக்க தொடர்

நிகழ்வில் வலம்புரி நிர்வாக உத்தியோகஸ்தர் என் சண்முகாநன்தன் வரவேற்புரையை நிகழ்த்த ஆசிரியர் க.திருமாலழகன் நிகழ்ச்சிகளை தொகுத்து நெறிப்படுத்தினார்.

வம்புரியை வாழ்த்தி யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை மற்றும் ஆசிரியர் சங்கத்தலைவர் க.தேவராஜா மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அ.கி. சிவசுப்பிரமணியம் மற்றும் ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளரும் வலம்புரியின் ஆலோச கருமான கோ.சி.வேலாயுதம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் வலம்புரிச் செய்தியாசிரியர் மு.வாமதேவன் ஆசிரியர், ந.விஜயசுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் உதவிக்கல்விப்டணிப்பாளர் கமலநாதன் ஞாபகார்த்த பரிசளிப்பு விழா அறிமுக உரையை ஓய்வுபெற்ற முன்னாள் அதிபரும் வலம்புரி ஆசிரிய பீடத்தைச் சேந்தவரமான கவிஞர் சு.துரைசிங்கம் நிகழ்த்தி பரிசளிப்பு வைபவததை நடாத்தினார்.

கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து வலம்புரி செய்தியாசிரியர் செல்வி உ.சாராணி செல்லத்துரை நன்றியுரை நிகழ்த்தினார்.

(இ)

வலம்புரியின் ஒப்(f) செற் பதிப்பில் உங்கள் விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க முடியும் என்பதனை எமது அன்பார்ந்த விளம்பரதாரர்களுக்கு தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

-நிர்வாகம்.

## ரணில்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நாடுதிரும்பிய கையோடு விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்திற்கு நல்லெண்ண நடவடிககையாக யுத்தநிறுத்த பிரகடனம் ஒன்றை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது,

(வ)

## புலிகள்.....

1ம் பக்க தொடர்

மேலும் கருத்து வெளியிடுகையில்:

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் ஆச்சப்படக் கூடியதொன்றல்ல. புலிகள் தமிழீழ கோரிக்கையை கைவிட்டு யுத்தநிறுத்தத்தை அறிவித்தால் தான் அதனை பரிசீலிக்கலாம் என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

(வ)

## விடுதலைப்.....

(1ம் பக்கத்தொடர்)

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிப்பதாவது:

நத்தார் பண்டிகைத்தினம் முதல் ஒருமாத காலத்திற்கு யுத்த நிறுத்தம் செய்யப்போவதாக விடுதலைப்புலிகள் ஒருதலைப் பட்சமாக பிரகடனம் செய்துள்ளமையை முழுமன தோடு வரவேற்கிறோம். யுத்தம் என்பது அழிவுகளையும் இழப்புக்களையுமே தரவல்லது, சமாதானம் நிம்மதியான அமைதியான வாழ்வையும், ஆக்கபூர்வமான அபிவிருத் தியையும் தரக்கூடியது. என்வே சமாதானம் ஏற்பட வேணடும் எனபதுவே பெரும்பாலான மக்களின உளப்பூர்வமான விருப்பம். இந்த விருப்பத்தை வெளிக்காட்டக்கூடிய சமிக்ஞைகள் தோன்றியிருப்பது வரவேற்புக்கு உரியதாகும்.

பகமை உணர்வுகள் புறந்தள்ளப்பட்டு மோதல் சம்பவங்கள் முடிவுக்குவரும் சூழ்நிலை பெறுவது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இந்த மகிழ்ச்சி வெறும் நீர்க்குமிழிகள் போல் ஆகிவிடக்கூடாது என்பதே எமது பொரும் விருப்பமாகும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

இப் பத்திரிகை 'வலம்புரி'அன் கோ ஸ்தாபனத்தாரால், இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.